செ.வெ.எண் : 152

15/2/2011

ஆசிரியர் தேர்வு வாரியம்,
4வது தளம், ஈ.வெ.கி.சம்பத் மாளிகை,
சென்னை 600 006.

---

## செய்திக்குறிப்பு

**பட்டதாரி ஆசிரியர் நேரடி நியமனம் 2010 – 2011ம் ஆண்டு பணியிடங்களுக்கு பதிவு மூப்பு அடிப்படையில் வேலை வாய்ப்பகத்தால் பரிந்துரை செய்யப்பட்ட விடுபட்ட பணிநாடுநர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு நடைபெறுதல்.**

2010 – 2011ம் ஆண்டிற்கு வெவ்வேறு துறைகளில் நிரப்பப்படவுள்ள பட்டதாரி ஆசிரியர் பணியிடங்களுக்கு வேலை வாய்ப்பகத்திலிருந்து தற்போது பரிந்துரை செய்யப்பட்டுள்ள விடுபட்ட அனைத்து இனத்தினரையும் சேர்த்து 783 பட்டதாரி பணிநாடுநர்களுக்கு ஆசிரியர் தேர்வு வாரியத்தில் சான்றிதழ் சரிபார்ப்பு பணி 17.02.2011 மற்றும் 18.02.2011ல் நடத்தப்பட உள்ளது. அதற்கான அழைப்புக் கடிதங்கள் பணிநாடுநர்களுக்கு ஏற்கனவே அனுப்பப்பட்டு உள்ளது.

அழைப்பு கடிதம் அனுப்பப்பட்டுள்ள பணிநாடுநர்களின் பட்டியல் ஆசிரியர் தேர்வு வாரிய இணைய தளத்தில் இன்று வெளியிடப்பட்டுள்ளது. அழைப்புக்கடிதம் கிடைக்கப் பெறாதவர்கள் இணைய தளத்திலிருந்து நகல் எடுத்துக்கொண்டு சான்றிதழ் சரிபார்த்தலின்போது கலந்து கொள்ளலாம் என தெரிவிக்கப்படுகிறது.

15/2/2011
தலைவர்

வெளியீடு, இயக்குநர்,
செய்தி, மக்கள் தொடர்புத் துறை,
சென்னை-9

15/2/11